சித்தூரிலுள்ள குளிரூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் செல்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதை மீண்டும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

வேளாண்மைப் பயிற்சி பெற்றவர்கள்.

*வினா எண் 27—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வேளாண்மைத்துறையால் நடத்தப்படும் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 1977-ம் ஆண்டில் இருந்து 1980 வரை எத்தனை மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 1977-ம் ஆண்டிலிருந்து 31–7–80 முடிய வேளாண்மைத்துறையால் நடத்தப்படும் வேளாண்மைப் பயிற்சி பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் 20 பேர்களுக்கு அரசாங்கத்தால் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால் : வேளாண்மைத்துறையில் பயிற்சி பெற்ற மொத்த மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 813.

திரு. த. வேணுகோபால் : அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி அளிக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்தப் பயிற்சிப் பள்ளியின் முக்கிய நோக்கமே கிராமப்புறத்தில் உள்ள இளைஞர்களுக்கு முன்னேற்ற சாகுபடி முறைகளில் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதுதான். வேலைவாய்ப்பு உத்தேசத்தோடு இந்தப் பள்ளிகள் நடத்தப்படுவதில்லை. அவ்வப்போது வாய்ப்புகள் ஏற்படும்போது நிச்சயமாக வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

திரு. மு. அப்பாதுரை : அரசால் நடத்தப்படும் பள்ளிகள் தவிர தனியார்கள் இப்படிப்பட்ட பள்ளிகள் நடத்துவது அரசுக்குத் தெரியுமா ? அப்படி நடத்தப்படுகிற பள்ளிகளில் தவறான முறையில் பணம் வாங்கப்படுவதும் அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தெரியாது. தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

1981 ஜனவரி 24]

திரு. இல. பலராமன் : இந்த வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் எந்தத் தகுதி அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்? தேர்வுக் குழு அது குறித்து பரிசீலிக்கும் நிலையில் அதில் ஏற்படும் தவறுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 18 வயது முதல் 30 வயது வரை உள்ளவர்களாகவும், எட்டாவது வகுப்பு அல்லது தேர்ட் பாரம் '' (Third Form) '' வரை குறைந்தபட்சம் படித்தவர்களாக இருக்கவேண்டும். பயிர்த் தொழிலில் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதுதான் தகுதி. இதில் தவறு எதுவும் நடப்பதாக அரசுக்குத் தகவல் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : கிட்டத்தட்ட 120 மாணவர்கள், ஹரிஜனங்கள், மலைவாழ் மக்கள் இருந்தும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா? அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து கொண்டவர்கள் 813 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் வேலைவாய்ப்பு உத்தரவாதத்தோடு இந்தப் பள்ளிகள் நடத்தப்படுவதில்லை. கிராமப் புறங்களில் வேளாண்மைத் துறையில் முன்னேற்ற முறையில் அவர்கள் சாகுபடி செய்ய வேண்டும் என்பதுதான் இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கம். செயல் விளக்க உதவியாளர் பதவிகள் காலியாகிற நேரத்தில் முன் உரிமை அளிக்கப்பட்டு இவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மலைவாழ் பகுதி மாணவர்களும் இதில் இருக்கிறார்கள். வாய்ப்பு எப்போது வருமோ அப்போது தரப்படும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளியிலே படிக்கக்கூடிய ஏழை மாணவர்களுக்கு இலவச ஸ்காலர்ஷிப் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பற்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நான் பல முறை, ஏறத்தாழ 31 நிமிடங்களாக என் உடல்நிலையைக் கூட பொருட்படுத்தாமல் கையை உயர்த்திக்கொண்டிருந்தும், தாங்கள் ஒருமுறை கூட என்னை அழைக்கவில்லை. என்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கின்ற அடிப்படையில் நான் இந்த அவையை விட்டு வெளியேறுகிறேன்.

(திரு. என். கிட்டப்பா வெளிநடப்புச் செய்தார்)